# குறுந்தொகையில் தமிழரின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்

*ஆய்வாளர்*

***சி. கவிதா***

*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)*
*தமிழ் உயராய்வு மையம்*
*யாதவர் கல்லூரி (தன்னாட்சி)*
*மதுரை – 625014.*

## முன்னுரை

பண்டையத் தமிழர்களின் வரலாற்றையும் வாழ்க்கை முறையையும் அறிந்து கொள்வதற்குச் சங்க இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன. ஒரு மனிதனோ ஓர் இனமோ தொடர்ச்சியாகப் பின்பற்றும் பழக்கங்கள் தான் வழக்கமாகின்றன. அப்பழக்க வழக்கங்களே பண்பாடு, நாகரிகம், கலாச்சாரம் போன்றவற்றை அவ்வினத்தின் சந்ததியினருக்கு உணர்த்துகின்றது. உணர்வின் வெளிப்பாடே பழக்கவழக்கங்களாக மலர்கின்றன. சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான கலித்தொகை ‘பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்’ என்று விளக்கம் தருகின்றது. பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் மனிதனின் தேவையின் அடிப்படையில் தோன்றியவையாகும். பழக்க வழக்கமும் நம்பிக்கையும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள் எனலாம். அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர். குறுந்தொகையில் தமிழரின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தமிழர்களின் பழக்க வழக்கங்கள்

### தழையுடை

மரப்பட்டைகளையும் தழைகளையும் தமது அங்கங்களை மறைக்கப் பயன்படுத்திய மனிதன் அதனைப் பல்வேறு வேலைப்பாடுகளுடன் ஒப்பனை செய்து பயன்படுத்தினான். குறுந்தொகைப் பாடல்களில் பெண்கள் தழையாடை உடுத்திய செய்தி மிகுதியான பாடல்களில் காணப்படுகின்றன. தழையுடை என்பது தழையாலும், மலராலும், தளிர்களாலும் அமைக்கப்பட்டு இருக்கும் உடையாகும். பரத்தை ஒருத்தி தழையுடை அணிந்து கொண்டு தலைவனைக் காணவரும் காட்சியை,

> **“அயவெள் ஆம்பல் அம்பகை நெறித்தழை**
> **தித்திக் குறங்கின் ஊழ்மாறு அலைப்ப**
> **வருமே சேயிழை, அந்தில்**
> **கொழுநற் காணியƒ அளியேன் யானே!”** (குறுந்.293:5-8)

என்ற பாடல் உணர்த்துகிறது. இதன் மூலம் ஆம்பல் மலரால் தழையுடை ஆக்கப்பட்டதென்பது தெளிவாகிறது. இதே தழையுடை குவளை மலராலும் ஆக்கப்பட்ட செய்தியினை,

> **“குவளைத் தண்தழை இவள்”** (குறுந்.342:5)

எனும் குறுந்தொகைப் பாடலடி தலைவி தழையுடையை அணிந்திருந்ததை உணர்த்துகிறது.
பண்டைத் தமிழர்கள் இன்று ஆடை அணிவதிலும் ஆடை உற்பத்தியிலும் முன்னணியில் உள்ளனர் என்பதை அவர்கள் அணியும் ஆடைகள், பண்டிகைகால புதிய ஆடைகள் நமக்குக் காட்டுகின்றன.

**மலர்கள் அணிதல்**

இயற்கைப் பொருள்களில் அழகும் சிறப்பும் மணமும் மிக்கவை மலர்களாகும். மலர் காணக் காணக் கண்ணுக்குக் குளிர்ச்சி தரும். அதிலிருந்து எழும் மணம் முகர முகர இன்ப மயக்கத்தை விளைவிக்கும். அதன் மென்மை தொடத் தொடச் சுகந்தரும். அதன் தேன் உண்ண உண்ணத் தெவிட்டாதுƒ அதனில் மொய்க்கும் தும்பி பண்ணிசையை நாளெல்லாம் கேட்கலாம். மலர்கள் மிகுதியாக மலர்ந்து நிற்கும் காட்சி செழிப்பின் அடையாளமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**மகளிர் சூடிய மலர்கள்**

முல்லை என்னும் மலரினை மணமான மகளிரே சூடினர். **“முல்லை சான்ற கற்பின் மெல்லியல்”**[1] எனும் சிறுபாணாற்றுப்படைப் பாடலடிகள் இதை மெய்ப்பிக்கும். தலைவியின் கூந்தலைப் பற்றிக் குறிப்பிடும் போது முல்லைப் பூவினோடு ஒப்பிடப்பட்டிருந்ததை,

**“இனைமதி வாழிய நெஞ்சே! மனைமரத்து**
**எல்லுறும் மௌவல் நாறும்**
**பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே? ”** **(குறுந்.19:3-5)**

எனும் குறுந்தொகைப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

தலைவியின் கூந்தலை வர்ணிக்கும் போது வெட்சியினது முறுக்கு அவிலும் பேரரும்புகள் மணக்கின்றதனை,

**“கடற்றில் கலித்த முடச்சினை வெட்சித்**
**தளைஅவிழ் பல்போது கமழும்**
**மைஇருங் கூந்தல் மடந்தை நட்பே”** **(குறுந்.209:5-7)**

என்ற பாடலடிகளும் காட்டுகின்றன.

**“நரந்தம் நாறும் குவைஇருங் கூந்தல்”** **(குறுந்.52:3)**

என்ற பாடலடியும் மகளிரின் கூந்தலுக்கு நரந்தம் பூ ஒப்புமை கூறப்பட்டதை குறிப்பிடுகிறது.

இன்று விழாக்களிலும் திருமணங்களிலும் மட்டுமே அணியப்பெறும் மாலைகள் அன்று அன்றாட வாழ்வில் எக்காலத்தும் பெண்டிர் அணியும் அழகு சாதனமாக மங்கலப் பொருளாகப் பார்க்கப்பட்டன. மகளிர் மாலை சூடியதனை,

**“தொடலை ஆயமொடு தழுவணி அயர்ந்தும்”** **(குறுந்.294:2)**

எனும் பாடலடியும்,

**“மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்”** **(குறுந்.393:1)**

எனும் பாடலடியும் விவரிக்கின்றன.

**ஆடவர் சூடிய மலர்கள்**

சங்க காலத்தில் பெண்டிரைப் போலவே ஆடவரும் வேறுபாடின்றி பூக்களைச் சூடினர். பாலை நிலத்தின் கண்ணுள்ள வேம்பின் மலரினைத் தலையில் சூடிக் கொண்டதை,

**“வெண்மணற் பொதுளிய பைங்கால் கருக்கின்**
**கொம்மைப் போந்தைக் குடுமி வெண்தோட்டு**
**அத்த வேம்பின் அமலை வான்பூச்**
**சுரிஆர் உளைத்தலை பொலியச் சூடி**
**குன்றுதலை மணந்த கானம்**

**சென்றனர் கொல்லோ சேயிழை நமரே"** **(குறுந்.281)**

என்பதன் மூலம் அறியலாம். இன்று வாழை நாரில் பூக்களை விரவித் தொடுத்தது போல அன்று தமிழர் பனந்தோட்டில் மலரைப் பிணைத்துக் கட்டி அணிந்தனர் என்பதனை அறியலாம்.

மேய்ச்சல் நிலத்திலிருந்து ஊருக்குள் வந்து திரும்புகின்ற இடையன் தலையில் முல்லைப் பூ சூடிச் சென்றதனை,

**"ஆடுடை இடைமகன் சென்னிச்**

**சூடிய எல்லாம் சிறுபசு முகையே"** **(குறுந்.221:4-5)**

எனும் பாடலடிகள் விவரிக்கின்றன.

மாலைக்காலத்தில் பசுக்களோடு திரும்பி வரும் இடையர்கள் முல்லைப்பூ மாலை சூடியிருந்ததினை,

**"பல் ஆன் கோவலர் கண்ணிச்**

**சொல்லுப அன்ன முல்லை வெண்முகையே"** **(குறுந்.358:6-7)**

எனும் பாடலடிகளும் தெளிவுறுத்துகின்றன.

**அணிகலன்களால் ஒப்பனை செய்தல்**

ஒரு சமூகத்தின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் காட்டும் பலவற்றுள் அச்சமூகத்தினர் அணியும் ஆடைகளும், அணிகலன்களும் குறிப்பிடத்தக்கவையாகும். பண்டையத் தமிழர்கள் ஒப்பனைக்குப் பலவகையான அணிகலன்களைப் பயன்படுத்தியுள்ளனர். சங்க காலத்தில் மகளிர் இயற்கையில் கிடைக்கும் தளிர், மலர், தழை, மொட்டு, கொடி போன்றவற்றைப் பல்வேறு விதமாக வடிவமைத்துத் தலையில் சூடியும், உடம்பில் அணிந்தும் மகிழ்ந்துள்ளனர். அணிகலன்கள் அழகு ஊட்டவும், செல்வ வளமையைக் காட்டவும், பழக்கவழக்கங்களை உணர்த்தவும், பண்பாடு, நாகரிக வளர்ச்சியினை அறியவும் துணை செய்கின்றன. அணிகலன்கள் என்பது தலை முதல் கால் வரை நாம் அணியக்கூடிய அலங்கார பொருட்களாகும்.

**தலை அணிகலன்கள்**

தலையில் அணியப்படும் அணிகலன் தலை அணிகலன் எனப்படுகிறது. மக்கள் உடம்பில் தலைமிக முக்கிய உறுப்பாகையினால் தலைமீது அணியப்படும் அணிகளும் சிறப்புடையனவாக மதிக்கப்பெற்றன. தலையில் விலையுயர்ந்த அணிகளையே அணிந்தனர். பொன்னும் மணியும் இடம் பெறுவதற்குரிய சிறப்பான இடம் தலையேயாகும்.

**"பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்**

**கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்"** **(குறுந்.21:2-3)**

என்னும் பாடலடிகள் மகளிர் தங்கள் தலையில் பொன்னாலான அணிகலன்களை அணிந்திருந்ததைப் போல கொன்றை மலர்கள் பூத்துக் குலுங்கிய செய்தியினைக் கூறுகின்றன. சங்ககால மகளிர் தலையில் அணிகலன்களை அணிந்திருந்ததைப் போன்று இக்காலப் பெண்களும் விதவிதமான தலையணிகலன்களை பயன்படுத்தி வருகின்றனர்.

**காதணிகலன்கள்**

காதில் அணியப்படுவது காதணியாகும். பழங்காலத்தில் காதணிகள் குழையாகவும் பூக்களை தோடுகளாவும் பயன்படுத்தினர். பின்னர், நாகரிக வளர்ச்சி, உலோகங்களின் கண்டுபிடிப்பு ஆகியவற்றால் பொன், வெள்ளி, நவரத்தினங்கள் காதணிகள் செய்யப்பட்டு மக்கள் அணிந்தனர்.

மகளிர் மட்டுமின்றி ஆடவரும் காதுகளில் அணிகள் அணியும் வழக்கம் இருந்தது. பிற்காலத்தில் அவ்வழக்கம் குறைந்து விட்டாலும் அதன் எச்சமாகக் குழந்தைப்பருவத்தில் ஆணிற்கும் காதுகுத்தும் வழக்கம் ஒரு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

சங்க கால மகளிர் தம் காதுகளில் பூவேலைப்பாடுகள் செய்யப்பட்ட பொன்னால் ஆன அணிகலன்களை அணிந்திருந்தனர் என்பதை,

**"யாங்குஆ குவள்கொல் பூங்குழை என்னும்"** (குறுந்.159:5)

என்னும் பாடலடி மூலம் அறியலாம்.

இக்காலத்திலும் எண்ணற்ற வகையில் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய பொன்னால் செய்யப்பட்ட குழைகளை காதில் அணிகின்றனர். **'பொன்னில் போடும் பணமும் மண்ணில் போடும் பணமும் என்றைக்கும் வீணாகாது"** என்ற பழமொழி போல பொன் நகைகளை மக்கள் அதிகம் வாங்குவதையும் பயன்படுத்துவதையும் நம்மால் காண முடிகிறது.

**கையணிகள் (வளையல்)**

கை அணிகளுக்கென்று தனிச் சிறப்புக்கள் உள்ளன. கைகளில் அணிகலன் அணிந்துக் கொள்வது ஒப்பனையில் முக்கியமானதாகும். மகளிர் பலவகையான வளையல்களை அணிந்து கொண்டு நடக்கும் பொழுதும் ஆடும்பொழுதும் கலகலவென ஒலிக்கும். அதனால் மகளிரை புலவர்கள் 'ஒண்டொடி மகளிர்' என உரைத்தனர்.

தலைவி தன் கைகளில் வளையல் அணிந்த செய்தியினை,

**"வளையுடைக் கையள் எம்மொடு உணீஇயர்"** (குறுந்.56:3)

என்னும் பாடலடியும்,

**"கோல்அமை குறுந்தொடிக் குறுமகள் ஒழிய"** (குறுந்.267:5)

என்னும் பாடலடியின் மூலமும் பண்டைத் தமிழர்கள் திரட்சியான சிறிய வளையல்களை அணிந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

குறுந்தொகை காலமக்கள் இருபாலருமே மலர்களையும் மாலைகளையும் சூடினர். தலைவி ஒப்பனை செய்துகொள்வதில் மிகவும் விருப்பமுற்றவளாக இருந்தனர். ஒப்பனை செய்வதில் ஆண்களைவிட பெண்களே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

**தமிழரின் நம்பிக்கைகள்**

**இயற்கைக்கு அப்பாற்பட்ட இறைவன்**

அச்ச உணர்வே மனிதனைக் கடவுள் நெறிக்கு இட்டுச் செல்கின்றன. தம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் புலப்படாத உட்படாதவைகளின் மீது அச்சத்தின் காரணமாக மனிதன் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினான். எனவே பேய், கூற்றுவன் ஆகியவற்றின் மீது அச்சம் கொண்டான். அந்த அச்சம் கலந்த நம்பிக்கையின் அடிப்படையில் மனிதனிடம் கடவுள் நம்பிக்கை தோன்றியது என்று கூறலாம்.

**"இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் என்பது இயற்கை உலகில் காணப்படாத தெய்வீக நிகழ்ச்சிகளைக் குறிப்பதாகும். தெய்வங்களின் செய்கைகளும் தெய்வம் சார்பான நிகழ்ச்சிகளும் மக்கள் வாழ்வில் நேரில் காணப்படாமல் இயற்கைக்கு அப்பாற்பட்டு நின்று தொடர்பு பெறுவது பற்றி அவை இயற்கைக்கு அப்பாற்பட்டவை எனக் கருதப்படுகின்றன"**[2] என்பார் ஔவை சு.துரைச்சாமிப்பிள்ளை.

பழந்தமிழரின் சமயக் கோட்பாடு அச்சத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றினாலும் இயற்கையோடு இணைந்த வழிபாடே தமிழர் வழிபாட்டு முறையாகும். இயற்கைப் பொருட்கள் யாவும் கடவுளின் செயலாகக் காட்சியளிக்கின்றன. இயற்கையாகிய உடல் முழுவதும் கடவுள் நீங்கமற நிறைந்து நின்று இயக்குகின்றார். இந்த இயற்கை வழிபாட்டினைக் குறுந்தொகையில் இடம் பெறும் பிறை தொழும் மகளிர் நிலையின் மூலம் அறியலாம். பழந்தமிழர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டும் இறைவன் திகழ்கிறான் என நம்பினர். மரத்தில் தெய்வம் உறைவதாகக் கருதி வழிபட்டதனை,

**“மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்” (குறுந்.87:1)**

என்னும் பாடலடி விளக்குகிறது. காலப்போக்கில் மரத்தின் அடியில் கடவுளுக்கு உருவச்சிலை அமைத்து வழிபட்டனர். வழிபாடு செய்பவரின் மூலமே இறைவன் வெளிப்படுவான் என்ற நம்பிக்கையும் பழந்தமிழர்களுக்கு இருந்தது. அம்மன் கோயில்கள் இருக்கும் இடங்களுக்கு அருகில் இன்றும் வேப்பமரங்கள் அமைந்துள்ளன. அம்மனைச் சுற்றி வணங்கும்போது மரத்தையும் சேர்த்தே சுற்றி வணங்கும் நிலையினையும் காணலாம்.

**சூள் செய்தல்**

சூரர மகளிர் என்போர் ‘அச்சந்தரும் தெய்வ மகளிர்’ என்ற நிலையிலேயே சுட்டப்பட்டுள்ளனர். தெய்வத்தைச் சுட்டிக் கூறிச் சூள் செய்தல் பழந்தமிழரின் நம்பிக்கை ஆகும். தலைவன் ஒருவன் தலைவனிடம் ‘உன்னை விரைவில் மணந்து கொள்வேன்’ என்று சூளுரைக்கிறான். காலமோ கடந்து சென்றது. தலைவன் வரைந்து கொள்ளவில்லை. தலைவன் செய்த சூளினை நினைந்து வருந்துகிறாள். அந்த வருத்தம் கவலையை மிகுவிப்பதால் தலைவனிடம் கூறுகிறாள்.

**“எம்அணங் கினவே மகிழ்ந! முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறிஅயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன
எக்கர் நண்ணிய எம்மூர் வியன்துறை
நேர்இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரொடு உற்ற சூளே” (குறுந்.53)**

சூரர மகளிர் முன் உரைத்த சூளினை நினைவூட்டுகிறாள். இதற்குக் காரணம் ‘சூள் பொய்த்தக்கால் அச்சூளால் குறிக்கப்படும் தெய்வம் சூள் பொய்த்தாரை வருத்தும் என்ற நம்பிக்கையே’ ஆகும். மேலும் இது சூரரமகளாகிய தெய்வ மகளிரையும் சுட்டி சூள் செய்யும் செயலையும் காட்டுகிறது. இந்த நம்பிக்கை இன்றும் தொடர்கிறது எனலாம். இதற்குக் காரணம் ‘சத்தியத்தை மீறினால் தெய்வம் தண்டிக்கும்’ என்ற நம்பிக்கையே ஆகும்.

**கூற்றுவன்**

கூற்றுவன் என்பவன் உடலையும் உயிரையும் வெவ்வேறாகப் பிரித்துக் கூறுபடுத்தும் கடவுளாக இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளான். கூற்றுவனை வாழ்நாள் வரையறுக்கப்பட்ட உயிர்கள் பால் செல்பவனாகக் குறுந்தொகை காட்டுகிறது. கூற்றுவன் நாள்தோறும் கொலைத்தொழில் புரிபவன் என்ற செய்தியினை,

**“ஆள்வினை மருங்கில் பிரியார், நாளும்**

**உறல் முறை மரபின் கூற்றத்து**

**அறன்இல் கோள்நற்கு அறிந்திசி னோரே''** **(குறுந்.267:6-8)**

என்னும் பாடலடிகளின் மூலம் அறிய முடிகிறது.

**ஊழ்வினை**

சங்க காலத் தமிழர்களிடம் ஊழ்வினை குறித்த நம்பிக்கைகள் இருந்தன. இந்த உண்மையைத் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களில் விரிவாகக் காணலாம்.

**''ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**

**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**

**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப***ƒ*

**மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே''**[3]

என்பது தொல்காப்பியர் சூத்திரம். 'ஒரே நிலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம்*ƒ* அல்லது வெவ்வேறு நிலத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். உருவிலும், திருவிலும் ஒத்த இரு ஆண் பெண்கள் முன் செய்த வினையால் ஒருவரையொருவர் காண்பர்*ƒ* காதலிப்பர்*ƒ* பெண்ணை விட ஆண்மகன் சிறந்தவனாயினும் கொள்ளத்தகும்' என்பதே இதன் பொருள்.

ஒருவன் செய்யக்கூடிய செயல்களின் பலன்களை மறு பிறவியிலும் அனுபவிப்பதே 'ஊழ்வினை' ஆகும். ஊழ் தந்த உறவே காதல் அதன்வழி நிகழ்வதே மணம் என்பது குறுந்தொகையில் காணப்படுகிற நம்பிக்கைகளாகும்.

**''பால்வரைந்து அமைத்தல் அல்லது அவர்வயின்**

**சால்பு அளந்து அறிதற்கு யாஅம் யாரோ?''** **(குறுந்.366:1-2)**

பழவினைப் பயனால் வரையறுக்கப்பட்டதல்லாமல் அத்தலைவர் திறத்தால் தகுதியை வரையறுத்து அறிய யாம் எம் தகுதியுடையோம் என்கிறாள் தலைவி.

தலைவனும் தலைவியும் இளம்வயதில் பூசலை உடையவர்களாக வாழ்ந்தனர். ஆனால் காலம் வந்துற்றபோது துணைமலரின் பிணையல் போலாயினர். இதனை,

**''நல்லைமன் றம்ம பாலே மெல்லியல்**

**துணைமலர்ப் பிணையல் அன்னஇவர்**

**மணமகிழ் இயற்கை காட்டி யோயே''** **(குறுந்.229:5-7)**

என்ற பாடலால் ஊழ்வினையே தலைவனும் தலைவியும் இணைந்து வாழக்காரணமென்று உணரலாம்.

**முடிவுரை**

குறுந்தொகையில் தமிழரின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் மனிதனின் வாழ்வில் முக்கியப்பங்காற்றுகின்றன. நாள்தோறும் செய்யும் செயலே காலப்போக்கில் வழக்கமாக மாற்றம் பெறுகிறது. சங்க கால மக்கள் தழையுடை அணிந்து இருந்தான். மகளிர் மட்டுமின்றி ஆடவர்களும் மலர்சூடியிருந்தனர். தலை அணிகலன்கள் காதணிகலன்கள் கையணிகலன்கள் அணிந்திருந்தனர். மனிதனிடம் அச்ச உணர்வின் காரணமாக இறை நம்பிக்கை தோன்றி நம்பிக்கையாக வளர்ந்து கொண்டிருக்கிறது. மனிதன் இயற்கையை மீறிய ஆற்றல் இறைவன் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். சூரர மகளிர் சூள் உரைக்கும் நம்பிக்கையும் மக்களிடத்தில் இருந்துள்ளது.

தீய செயல்கள் செய்பவர்களை கூற்றுவன் தண்டிப்பான் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. தான் செய்யும் செயலால் ஏற்படக்கூடிய பலனையே ஊழ்வினையாக மனிதன் அனுபவிப்பான் என்ற நம்பிக்கையும் மனிதர்களிடத்தில் இன்றளவும் நிலவி வருகிறது என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. சிறுபாண்.30
2. ஔவை சு.துரைச்சாமிப்பிள்ளை, சிலப்பதிகாரமும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளும், செந்தமிழ், தொ.51, பக்.257-266
3. தொல்.பொருள்.இளம்.நூ.90.

**துணைநூற்பட்டியல்**

1.இராகவையங்கார்., (ப.ஆ)., - **குறுந்தொகை விளக்கம்** அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்நூல் வெளியீடு, அண்ணாமலை நகர், முதல்பதிப்பு, 1993.

2. இளம்பூரணார், (உரை) - **தொல்காப்பியம் பொருளதிகாரம்** சாரதா பதிப்பகம், சென்னை, 2014.

3. சுப்பிரமணியன், ச.வே., (உ.ஆ)., - **சிறுபாணாற்றுப்படை தெளிவுரை** மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.

4. துரைச்சாமிப்பிள்ளை.சு - சிலப்பதிகாரமும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சிகளும், செந்தமிழ், தெகுதி-51. சென்னை.